பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதியில்

மிகப்பெரிய பொழுதுபோக்கு நகரம் அமைத்திடுவீர்!

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கோரிக்கை!

சென்னை, ஜூன் 28 - சட்டப்பேரவையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி பேசிய போது, பூவிருந்தவல்லித் தொகுதியில் மிகப்பெரிய பொழுதுபோக்கு நகரம் ஒன்று அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து ஆ.கிருஷ்ணசாமி பேசியதாவது:-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக மக்களின் சார்பில் நம் தலைவரின் உரிமை முழக்கம் வெற்றி பெற தமிழக மக்கள் அளித்த தீர்ப்பு அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அனைத்துத் துறை களிலும் 100/100 என்ற அடிப்படையில் வென்றிருக்கி றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

சமத்துவத்தோடு சரித்திரம் படைத்தவர், வெற்றியின் திசையில் நித்தம் நடப்பவர், தமிழகத்திற்கு விடியலைத் தந்த பூபாளம், இந்தியாவே வியக்கும் திராவிட மாடல் நாயகர், எங்கள் தலைவர் ஆருயிர் அண்ணன் தளபதியார் அவர்கள்.

'வேலன்று வென்றி தருவது மன்னவன்

கோலதூஉங் கோடா தெனின்'.

என்ற குறளை செங்கோன்மை அதிகாரத்தில், ஒரு அரசுக்கு வெற்றியைத் தருவது பகைவரை வீழ்த்தும் வேல் அல்ல. மக்களை வாழ வைக்கும் வளையாத செங்கோல்தான் மன்னவனுக்குச் சிறப்பு என்கிறார் வள்ளுவர். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் வெற்றி குறித்து முதல்வர் அவர்களிடம், நிருபர்கள் கேள்விக் கேட்டு வாய் மூடுவதற்குள்ளாக தனக்கு கிடைத்த வெற்றி, மக்களுக்குக் கிடைத்த வெற்றி. மக்களுக்கு நலத் திட்டங்கள் போய் சேர்ந்ததன் அடிப்படையிலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சிறப்புகளை யும், பெருமைகளையும் மக்கள் புரிந்து கொண்டதன் அடிப்படையிலும், 40க்கு 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்றோம் என்று தன்னடக்கத்துடன் வெற்றி செய்தியைக் கூறி விட்டு, கோயம்புத்தூர் முப்பெரு விழாவில் தலைவர் பேசுகிறார்.

பேசுகிறபோது, இந்த வெற்றி எனக்கான வெற்றி அல்ல. இந்தப் பாராட்டு எனக்கானப் பாராட்டு அல்ல. மேடையிலே இருப்பவர்களுக்கும், எதிரே அமர்ந்திருக்கிற கோடானுகோடி தொண்டர்களுக்குமான வெற்றி என்று தன்னடக்கத்தோடு பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல அவர் இன்னொரு செய்தியையும் சொல்கிறார். இந்த வெற்றியைத் தொடர்ந்து, 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்திட 200 தொகுதிகளில் வெற்றி காண்பதற்கு தொண்டர்கள் பணியாற்றிட வேண்டும் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் என்போன்ற தொண்டர்களுக்கு அறிவுரை வழங்கி, தமிழக மக்களுடைய மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறார். தலைவர், சேலம், மாநில இளைஞர் அணி மாநாட்டில் எப்படி அடக்கத்தோடு,உதயநிதி மாத்திரம் என்னுடைய மகன் அல்ல. இளைஞர் அணியில் இருக்கக்கூடிய இலட்சக் கணக்கான தம்பிமார்களும் என்னுடைய மகன்கள்தான் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இந்த தமிழ் மக்களை தன் குடும்பமாக பாவித்து, வெற்றி கிடைத்தாலும், எது நடந்தாலும் இது எல்லோருக்கும் சொந்தம் என்ற வகையிலே எப்படி உங்களில் ஒருவன் என்று தளபதி அடிக்கடி சொல்வாரோ, அந்த தலைவர் நம் நாட்டின் முதலமைச்சர். நம்மில் ஒருவராக இருந்து நம்மை எல்லாம் வழிநடத்துகிறார். நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில், இந்த ஆண்டு தாராளமாக நிதி வழங்கப்பட்டு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய நகர்ப் பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பொது சுகாதாரம், இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள், நவீன மின்மயானம், நூலகங்கள் மற்றும் கணினியுடன்கூடிய அறிவுசார் மையங்கள், பாதாள சாக்கடை போன்ற சமுதாய அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் நோக்கத்தோடு, அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற வகையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மூன்று ஆண்டுகளில் 1,328 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் முடிவுற்றும், 1,659 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தை செயல்படுத்திட வரும் நிதியாண்டில் ரூ.1000/ கோடி நிதி ஒதுக்கப்படும். அம்ரூத் 2.0 திட்டத்தில் ரூ.4,942 கோடி ஒன்றிய அரசு பங்களிப்புடன் ரூ.947 கோடி மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று 2024-2025ஆம் ஆண்டு பல்வேறு திட்ட நிதிகளைத் திரட்டி நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதியில் 4,457 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.2,500 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே தெரிவித்திருக்கிறார் கள். அந்த அடிப்படையிலே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரால் இருக்கக்கூடிய இந்தத் திட்டம் மிகச் சிறப்பான திட்டம். கடந்த ஆட்சிக் காலத்தைக் காட்டிலும் இந்த 3 ஆண்டு காலத்தில் இத்திட்டத்தின்மூலமாக நகர்ப்புறங்களில் மிக வேகமாக சௌகரியங்கள் பூர்த்தி அடைந்திருக்கின்றன.

மழைநீர் தேங்கவில்லை

இதனால் தன்னிறைவு அடையக்கூடிய சூழல் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, சாலை வசதியாக இருந்தாலும் சரி மற்றும் மற்ற வசதியாக இருந்தாலும் சரி அவையெல்லாம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாலும், இந்த 3 ஆண்டுகளில் தமிழ் நாட்டின் நகர்ப்புறங்களில், மாநகரங்களில் மழைநீர்க் கால்வாய்கள் அதிகமாக கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு சொல்வேன்.

2021-ஆம் ஆண்டு பெய்த மழையிலே முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து எல்லா பணிகளையும் மேற்பார்வையிட்டு, மழைக் காலங்களிலும் மேற்பார்வையிட்டு, மழை பெய்து முடிந்தவு டன் தண்ணீரை எப்படி லாவகமாக எடுத்துச் செல்லலாம், அதற்கு disposal point கண்டுபிடித்து அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டு பெய்த மழையில் ஒரு இடத்தில்கூட ஒரு சொட்டு மழைநீர்கூட எங்கும் தேங்காத அளவிற்கு முன்னெச்சரிக்கையோடு நடவடிக்கை எடுத்தார் என்று சொன்னால் அது நம்முடைய முதல்வர் அவர்களுடைய தீர்க்க தரிசனம் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் 2021 ஆம் ஆண்டு தளபதி அவர்கள் பார்வையிட்டு சென்றார். 2022-ஆம் ஆண்டு உதயநிதி அவர்கள் பார்வையிட்டுச் சென்றார்.

அவர்களோடு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நேரு அவர்களும் பம்பரமாக சுழன்று, புறநகரில் இருக்கக்கூடிய அனைத்து பகுதிகளையும் ஆய்வு செய்து, உடனுக்குடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, இந்த ஆண்டில் மழை நீர் எந்த இடத்திலும் தேங்காத அளவிற்கு KNMT திட்டம் மிகச் சிறப்பாக நடைமுறைப்

படுத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு அதிகமான நிதியை ஒதுக்கீடு செய்து, மிக வேகமாக, வரும் மழைக்குள்ளாக முன்னெடுப்பு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நகர்ப்புறத்தில் பார்த்தால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதற்கும் நிதியினை ஒதுக்கீடு செய்து, பல திட்டங் களை அறிவித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, இந்த பத்தாண்டுகளில் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

சென்னையின் கூட்ட நெரிசல்!

இது குறித்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எதிர்கால பத்தாண்டுகளில் இந்த சென்னை மாநகரத்தில் வாகனத்தில் போக முடியுமா என்பது நமக்கு சந்தேகமாக இருக்கிறது. அதுமாத்திரம் அல்ல. வேகவேகமாக நம்முடைய முதல்வர் அவர்களால் மெட்ரோ ரயில் திட்டங் கள் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டாலும் கூட, அதற்கேற்றவாறு மக்கள்தொகை கூடுகிறது. இன்றைக்கு இந்தியாவில் பார்க்கிறபோது, the fastest urbanisation in India is happening in Chennai என்று சொல்கிறார்கள். அந்த வகையில் சென்னைக்கு வெளிமாநிலத்தில் இருக்கக்கூடியவர்கள், நம்முடைய தென் மாவட்டங்களில் இருப்பவர்கள் அதிகமாக இடம்பெயர்ந்து வருகின்ற காரணத்தால், சென்னை மாநகரின் மக்கள் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது.

இன்றைக்கு சென்னை மாவட்டத்தில் மட்டும் 22 சட்டமன்ற தொகுதிகள் இருக்கிறது. ஆனால், இதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்றுசொன்னால், சென்னையில் வழங்கப்படுகின்ற அடுக்குமாடிக் குடியிருப்பு கள் அதிவேகமாக கோபுரம் போல் எழுந்து நிற்கிறது. அதையெல்லாம் கொஞ்சம் கட்டுப்படுத்தினால்தான் சென்னை மக்கள் தொகையை கொஞ்சம் குறைக்க முடியும். அதேநேரத்தில் சென்னைக்கு இணையான இன்னொரு மாநகரத்தை, புறநகர்ப் பகுதிகளில், தொழிற்பேட்டைகள் அதிகமாக இருக்கின்ற பூந்தமல்லி அல்லது திருப்பெரும் புதூர் பகுதிகளில் உருவாக்கினால், சென்னையின் கூட்ட நெரிசலை நாம் குறைக்கலாம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரையில், நகராட்சி நிர்வாகத்தில் மிகச்சிறப்பாக தூய்மைப் பணியை செய்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் சென்னை மாநகரத்தினுடைய மேயராக இருந்தபோது, குப்பைகளை அப்புறப்படுத்த சிறப்பான பல திட்டங்களைக் கொண்டு வந்தார். திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை நிறைவேற்றினார். அதன்தொடர்ச்சியாக, இன்று நாடு முழுவதிலுமுள்ள நகராட்சிகள், மாநகராட்சிகளில் குப்பைகள் அப்புறப்படுத்தப்பட்டு, தூய்மைப் படுத்தப்பட்டுள்ளதை நாம் பார்க்கிறோம்.

குப்பைகளை தேக்கி வைப்பதற்கு நகராட்சிப் பகுதிகளில் குப்பைக் கிடங்குகள் இல்லை. பூந்தமல்லி, திருப்பெரும்புதூர், திருவள்ளூர் பகுதிகளில் குப்பைக் கிடங்குகளே இல்லாத சூழ்நிலை உள்ளது. எனவே, அரசு புறம்போக்கு நிலங்களிலோ அல்லது விலை கொடுத்தோ மிகப்பெரிய குப்பைக் கிடங்குகளை அமைத்து இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் நம்முடைய முதலமைச்சர் ஒரு இயக்கமாக, "நம் குப்பை, நம் பொறுப்பு" என்ற ஒரு இயக்கத்தைத் தொடங்கி, அதனை நாடு முழுவதும் பிரச்சாரம் செய்து, இன்றும் மக்கும் குப்பை, மட்காத குப்பை என வீட்டுக்காரர்களே பிரித்து, அந்தப் பணியை செய்கிறார்கள். இருந்தாலும்கூட, குப்பையை எடுப்பவர்கள்— Whatsappல் ஒரு செய்தி வந்தது. ஒரு வீட்டுக்காரம்மா சொல்கிறார்கள். "என்னங்க, குப்பைக்காரர்கள் வந்திருக்கிறார்கள், போய் குப்பையைக் கொட்டி விட்டு வாங்க" என்று வீட்டுக்காரரிடம் சொல்கிறார்கள். அவர் சொல்கிறார், "குப்பைக்காரர்கள் அவர்கள் இல்லை, குப்பையை வைத்திருக்கும் நாம் தான் குப்பைக்கா ரர்கள், அவர்கள் நம்முடைய குப்பையை எடுக்க உதவி செய்ய வந்தவர்கள், அவர்களை குப்பைக்காரர்கள் என்று சொல்லாதே". அப்படிப்பட்ட தூய்மைப் பணியாளர்களை நாம் பத்திரமாக பாதுகாக்க வேண்டும். ஒருகாலத்தில் நகராட்சி, மநகராட்சிப் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்தான் scavengers தூய்மைப் பணியாளர்களாக பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் நிரந்தர பணியாளர்களாக வேலை செய்தார்கள். இன்றைக்கு மக்கள் தொகை பெருகிவிட்டது. குப்பையும் அதிகமாகி விட்டது. பிளாஸ்டிக்கும் அதிகமாகி விட்டக் காரணத்தால், தூய்மைப் பணியாளர்களை நாம் out sourcing முறையில் பணியமர்த்துகிறோம். அவ்வாறு நாம் out sourcing முறையில் பணியமர்த்தும்போது, அவர்களுக்கு பணிப்பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதை ஆராய வேண்டும்.

உதாரணத்திற்கு, ஏன் சொல்கிறேன் என்று சொன்னால், அம்பத்தூர் மண்டலத்திலே என்னுடைய உறவினர் ஒருவர் அம்பத்தூர் மண்டலத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, பணியிலிருக்கும்போது, ஒரு மணிக்கு, sunstrokeல் இறந்துவிட்டார். ஆனால், அவருக்கு எந்தவிதமான உதவியும் அளிக்கவில்லை. அந்த அம்பத்தூர் மண்டலத்திலிருந்து அதிகாரிகள்கூட வந்து அவரைப் பார்க்கவில்லை. அவர் என்னுடைய உறவினர் என்கிற காரணத்தால் நான் சென்று பார்த்தேன். எனவே, இதுபோன்று out sourcing முறையில் பணியமர்த்துகின்றவர்களுக்கான பணிப்பாது காப்பு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு நகராட்சிக்கும் Sewage Treatment Plant நாம் கொண்டுவர வேண்டும்.

Sewage Treatment Plant கொண்டுவர வேண்டும். இப்போதுதான் ஆரம்பிக்கிறேன். Sewage Treatment Plant இருந்தால்தான் நகரம் சுத்தமாகும். பாதாள சாக்கடை இல்லாத பகுதிகளில். Sewage Treatment Plant இல்லாததால், septic tankல் இருக்கிற கழிவுகளைக் கொண்டுவந்து, மழை நீர்க்கால்வாயில் விட்டுவிடுகிறார்கள். அதனால் அந்த பகுதி சுகாதாரமற்று கிடக்கிறது. எனவே, ஒவ்வொரு பகுதியிலும் Sewage Treatment Plant நிறுவி, கழிவுநீரை சுத்திகரிப்பு செய்து, அதனை disposal pointல் விட வேண்டும்.

கூவம் கழிவுநீர் சுத்திகரிப்பு!

தற்போது, கழிவுநீரை கூவம் ஆற்றில் அப்படியே விட்டுவிடுகிறார்கள். ஒரு காலத்தில் கூவம் ஆறு என்பது ஒரு புனிதமான ஆறு. எங்கள் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து வரக்கூடிய ஆறு. ஆனால், இன்றைக்கு கூவம் என்றாலே நாற்றமடிக்கிறது என்று மூக்கைப் பிடித்துக்கொள் கிறார்கள். கூவம் ஆறானது, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் அவர்களின் திருவள்ளூர் தொகுதியில்தான் அதிகமாக பயணிக்கிறது. என்னுடைய தொகுதியிலும் அதிகமாக பயணிக்கிறது. அது, சென்னைக்கு வரும்போது நாற்றமடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏனெனில், கழிவுநீரை Sewage Treatment Plantல் சுத்தி கரிக்காமல் அப்படியே விடுவதால், அந்த ஆறு நாற்றத்துடன்கூடிய கழிவுநீரை சுமக்கிறது. எனவே, ஒவ்வொரு disposal pointலும் கழிவுநீரை STP உள்ளிட்ட அமைப்புகள்மூலம் சுத்திகரிப்பு செய்து வெளியேற்றினால்தான், ஆறுகள் சுத்தமாக இருக்கும். எனவே, STPயை அனைத்து disposal pointலும் அமைக்க வேண்டும். அதற்கு பெரிய அளவில் முன்னெடுப்பு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாதாள சாக்கடைத் திட்டம். பேரூராட்சிகள், நகராட்சிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதி களிலும் நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். பூந்தமல்லி, திருவேற்காடு, மாங்காடு போன்ற நகராட்சிகளில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை 972.73 கோடியில் தூய்மை இந்தியா 2.0 மற்றும் பன்னாட்டு நிதியுதவியின்கீழ் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதை மிக விரைவிலே செயல்படுத்திட வேண்டும்.

அடுத்து, வெள்ளத் தடுப்பு. சமீப காலங்களில் சென்னை மற்றும் சென்னை புறநகர்ப் பகுதிகளில் எதிர்பாராத அளவிற்குமேல் மழை பெய்கிறது. சென்னைக்கு வரக்கூடிய வெள்ளத் தடுப்பு ஆறுகள் அனைத்தும் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில்தான் உள்ளன. அடையாறு, செம்பரம்பாக்கம், பூண்டி, புழல், சோழவரம் போன்ற ஏரிகளும், கொசஸ்தலையாறு, ஆரணியாறு, கூவம் ஆறு போன்ற ஆறுகளும் அங்கிருந்துதான் இங்கு வருகின்றன. எனவே, மழைக்காலங்களில் வெள்ளத் தடுப் பின் பொருட்டு அணை கட்ட வேண்டும், அதாவது, Check dams கட்ட வேண்டும். நீர்வளத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து check dams அமைத்தால் வெள்ள பாதிப்பினை நாம் கட்டுப்படுத்தலாம். காஞ்சிபுரம் மாவட்டம், அடையாறு பகுதிகளில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்வதற்காக 1,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள ஆறுகளிலும் அத்தகைய அணைகளைக் கட்டி வெள்ளத் தடுப்பினை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏரிகள் - குளங்கள் அதிகரிப்பு

அடுத்து, மெட்ரோ குடிநீர். திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில்தான் ஏரிகளும். குளங்களும் அதிகமாக இருக்கின்றன. எங்கள் பகுதியிலிருந்து தான் சென்னைக்கே தண்ணீர் வருகிறது. ஆனால், அதே ஊரில்தான் இருக்கும் நான், செம்பரம்பாக்கம் நல்ல தண்ணீரில் ஒரு டம்ளர் தண்ணீர்கூட குடிக்க முடியவில்லை. நாங்கள் bore well அமைத்தாலும் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. சுத்திகரிப்பு செய்தால்தான் குடிக்க முடியும். செம்பரம்பாக்கத்திலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டுவருவதற்கான வழித்தடங்களையெல்லாம் அமைத்திருக்கிறீர்கள். அதில், எங்களுக்கும் ஓர் இணைப்பு கொடுத்தால் நாங்களும் நல்ல தண்ணீர் குடிக்க முடியும். திருமழிசை, பூந்தமல்லி போன்ற பகுதிகளில் இணைப்பு கொடுக்க வேண்டு என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரம் மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. எனவே, நகர்ப்பகுதிகளில் பொழுதுபோக்கு இடங்களை உருவாக்க வேண்டும்.

சென்னை தீவுத்திடலில் பொழுதுபோக்கிற்கான கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக அமைச்சர் அவர்கள் 104 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அது போதாது. சிறு, சிறு நகரங்களிலும் வேண்டும். மிகப்பெரிய பொழுதுபோக்கு நகரத்தை உருவாக்க வேண்டும். நமது தமிழ்நாட்டிலிருந்து அதிகளவில் பொழுதுபோக்கிற்காக விமானத்தில் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்கிறார்கள். இதனால், இந்தியப் பணம், செலாவணி வெளிநாடுகளில் செலவிடப்படுகிறது. அவர்கள் மன உளைச்சலிருந்து விடுபட சென்று வருகிறார்கள். எனவே, சென்னையிலேயோ, சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதியிலேயோ மிகப் பெரிய ஒரு பொழுதுபோக்கு நகரத்தை உருவாக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் வலி) கணவன், மனைவி இருவரும் பணிபுரிபவர்களாக இருக்கிறார்கள். சனி, ஞாயிறு போன்ற week endல் எங்கே போவது என்பதே தெரியவில்லை. ECR road, Beach போன்ற இடங்களுக்குத்தான் போகமுடியும். ஆனால், அங்கெல்லாம் எப்போதும் கூட்டம் கூட்டமாகக் மக்கள் குவிந்து கிடக்கிறார்கள். அங்கு சென்றாலும் நிம்மதியாக இருக்க முடிவதில்லை. அவர்களுக்குள்ளே சண்டை வந்துவிடுகிறது. எனவே, ஒரு மிகப்பெரிய பொழுதுபோக்கு நகரத்தை உருவாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொழுது போகவில்லை என்று அமைச்சர் அவர்களிடம் சென்றால், பொழுது போய்விடும். அவர், பேசி, சிரித்து எப்படியாவது நம்மை மகிழ்வித்துவிடுவார். எனவே, ஒரு பொழுதுபோக்கு நகரத்தை உருவாக்கினால் சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களும் மகிழ்ச்சியடைவார்கள்.

என்னுடைய தொகுதியில் 150 ஏக்கர் பரப்பளவில், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன திரைப்பட நகரம் உருவாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அருமை உதயநிதி அவர்கள் வந்து பார்வையிட்டு செம்பரம்பாக்கம் பகுதியில் 150 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்து, அந்த இடத்தை ஒதுக்கீடு செய்ததற்காக அவருக்கும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, காலை சிற்றுண்டித் திட்டம். பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தை நகராட்சி நிர்வாகத் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துகிறது. அதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. சரியாக காலை 8 மணியிலிருந்து 9 மணிக்குள்ளாக அந்த உணவு வழங்கப்பட்டு விடுகிறது.

நான் கூடப்பாக்கம் பகுதியில் உள்ள பள்ளியை, பள்ளிக்கூடம் திறந்த அன்று சென்று பார்த்தேன். சுடச்சுட கிச்சடியும், சுடச்சுட சாம்பாரும் வழங்கியதை அந்தப் பிள்ளைகள் ஆவலோடு வாங்கி உண்டார்கள். முன்பெல்லாம் பிள்ளைகள் தூங்கி எழுந்து, தாமதமாக பள்ளிக்கு வருவார்கள். ஆனால், தற்போது 8.30, 9.00 மணிக்கெல்லாம் மாணவர்கள் பள்ளிக்கு வந்து, நன்றாக அமர்ந்து சாப்பிடுவதைப் பார்க்கிறபோது, முதலமைச்சர் அவர்கள், தாயாக இருந்து நம் தமிழ்நாட்டை வழிநடத்துகிறார் என்பதுதான் எனக்குப் பெருமையாக இருக்கிறது. அப்படிப்பட்ட முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்

பூவிருந்தவல்லி நகரம் மற்றும் பூவிருந்தவல்லி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களுக்கு 5 ஏக்கரில் குப்பை சேமிக்கும் கிடங்கு அமைத்திட வேண்டும்.

பூவிருந்தவல்லி நகரம் கண்டோன்மெண்ட் புறம்போக்கு இடத்தில் உள்ள வீடுகளுக்கு பட்டா வழங்கிடவும், ஜெமின்கொட்டுர் மற்றும் திருமழிசை பகுதியில் 150 ஆண்டுகளாக வசித்து வரும் ஆதிதிராவிடர்கள் பகுதி தவறுதலாக வருவாய் கணக்கில் கோயில் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதனை கிராம நத்தம் என்று மாற்றி பட்டா வழங்கிடவும் மேலும் சர்வே எண் 341, 341/1ல் உள்ள கூடப் பாக்கம் கலெக்டர் நகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்கிடவும் வேண்டும்.

பூவிருந்தவல்லி தொகுதியில் நிலுவையில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் மற்றும் திருமழிசை பேரூராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமல்படுத்த வேண்டும்.

திருவள்ளூர் ஒன்றியம் காக்களூர் ஏரியைத் தூர்வாரி ஏரியை சுற்றி நடைபாதை மற்றும் படகுசவாரி வசதி ஏற்படுத்தி சுற்றுலா தலமாக்க வேண்டும். தண்ணீர்குளம் ஏரியை தூர்வாரி கரையை அகலப்படுத்தி நடைபாதை அமைக்க வேண்டும்.

கெருக்கம் பூண்டி கிராமத்திலிருந்து கொசத்தலை ஆற்றின் குறுக்கே மேல் செம்பேடு கிராமத்திற்கு செல்ல பாலம் அமைக்க வேண்டும். மேலும் கெருக்கம் பூண்டி மற்றும் வெள்ளியூர் கிராமத்தில் கொசத்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க வேண்டும்.

புட்லூர் மற்றும் கொட்டாமேடு கூவம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும். திருவூர்- கோவில் குப்பம் நபார்டு மற்றும் கிராம சாலையின் வரவுக்கால்வாய் மீது சிறு பாலம் அமைக்க வேண்டும்.

பூவிருந்தவல்லியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும். புட்லூர் கிராமத்தில் உள்ள வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் புதிய அரசு வேளாண் கல்லூரி அமைக்க வேண்டும்.

கீழானூர், சோராஞ்சேரி, கிளாம்பாக்கம், வெங்கல் ஆகிய இடங்களில் நிலுவையில் உள்ள துணை மின்நிலையப் பணிகளை துரிதப்படுத்த வேண்டும். திருமணம் கிராமம் சித்தர்காடு தாத்தீஸ்வரர் சிவன் கோவில் குளத்தைச் சீரமைத்து, குளத்தைச் சுற்றிலும் நடைபாதை அமைக்க வேண்டும்.

இவ்வாறு ஆ.கிருஷ்ணசாமி பேசினார்.

விக்கிரவாண்டி தொகுதியில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் கிழக்குப் பகுதி சார்பாக மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி, பகுதிச் செயலாளர் வே.வாசு தலைமையில் விக்கிரவாண்டி நகரச் செயலாளர் நயினார் முகம்மது, பேரூராட்சித் தலைவர் அப்துல் கலாம் முன்னிலையில் பாகம் எண் 228–ல் வாக்கு சேகரித்தனர். உடன் வட்டச் செயலாளர் ஏ.வேதா, சி.தேவராஜ், டி.வெங்கடேசன், எஸ்.விஜயகுமார், கே.ஜெயசந்திரன், எஸ்.சத்தியா, கலை உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

சென்னை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எம்.விமலா மோகன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்101–வது பிறந்த நாளை முன்னிட்டு 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ., எஸ்.ஜெபதாஸ் பாண்டியன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். இதில் மாஸ், டி.வெங்கடேசன், நேதாஜி, யு.கணேசன், எஸ்.எல்.சுந்தர், பொன்.இளவரசன், இ.ரவிக்குமார், உசுர் (எ)அப்துல்ரஹ்மான், ஏ.முருகேசன், எம்.லோகநாதன், எம்.கோவிந்தராஜ், டி.திராவிடச்செல்வி, பி.சீனிவாசன், கே.ஜானகிராமன், இந்திரா, அக்தரிபேகம், பாம்பே லட்சுமி, பூங்கோதை, சோலை அம்மாள், கௌதமி, சுசீலா மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஷீலா மோகன், பி.விஜயா நன்றி கூறினர்.

ஆம்பூர் தொகுதி - மாதனூர் - மிட்டாளம் ஊராட்சி -

ஊட்டல் சரஸ்வதி கோயிலை சுற்றுலா தலமாக்க அரசு முன்வருமா?

சட்டப் பேரவையில் அ.செ.வில்வநாதன் வினா!

சென்னை, ஜூன் 28- சட்டப் பேரவையில் ஆம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கா.ராமச்சந்திரன் அளித்த பதிலும்